




# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 28481235

டிடிவி தினகரன்

பொதுச்செயலாளர்


“தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்”

தேதி:01.05.2024

**கழகப் பொருளாளர் வீரபாண்டி திரு.எஸ்.கே. செல்வம் அவர்களின் மீது போலியான புகாரில் பதிவு செய்யப்பட்ட பொய் வழக்கை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.**

**சட்டத்தின் படி நடக்க வேண்டிய தமிழக காவல்துறை ஆளுங்கட்சியின் சார்பு அணியாக செயல்படுவது கடும் கண்டனத்திற்குரியது.**

சேலம் மாவட்டம் வீரபாண்டி திமுக ஒன்றிய செயலாளர் திருமதி.வெண்ணிலா சேகர் மற்றும் அவருடைய கணவர் சேகர் ஆகியோர் அளித்த பொய் புகாரில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொருளாளரும், சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வீரபாண்டி திரு.எஸ்.கே செல்வம் அவர்கள் மீது சேலம் மாவட்டம் கொண்டலாம்பட்டி காவல்நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம் பூலாவரி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ஜேசிபி இயந்திரங்கள் மூலமாக நடைபெற்ற பைப்லைன் அமைக்கும் பணியை தடுத்து நிறுத்திய வீரபாண்டி திமுக ஒன்றியச் செயலாளர் திருமதி.வெண்ணிலாசேகர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி வீரபாண்டி திரு.எஸ்.கே.செல்வம் அவர்களின் மனைவியும் பூலாவரி ஊராட்சி மன்றத் தலைவருமான திருமதி ராதா (எ) ராணி அவர்கள் வீரபாண்டி ஒன்றிய ஆணையாளரிடம் புகார் மனு அளித்துள்ளார்.

**மக்கள் பணியை தடுத்து நிறுத்திய திமுகவினர் மீது நடவடிக்கை எடுக்கத் தவறிய காவல்துறை, கழகப்பொருளாளர் வீரபாண்டி திரு.எஸ்.கே செல்வம் மீது அளிக்கப்பட்ட போலியான புகார் மீது எந்தவித விசாரணையுமின்றி அவசரம் அவசரமாக பொய் வழக்கு பதிவு செய்து மக்கள் பணியாற்றும் எதிர்க்கட்சி உள்ளாட்சி பிரதிநிதிகளை முடக்க முயற்சிப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.**

ஆளுங்கட்சி பிரமுகர்களால் நாள்தோறும் அரங்கேறும் சட்டம் ஒழுங்கு பிரச்னைகள், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் தாராளப்புழக்கத்தை கட்டுப்படுத்த வேண்டிய தமிழக காவல்துறை, ஆளுங்கட்சியான திமுகவின் கைப்பாவையாக செயல்பட்டு மக்கள் பிரதிநிதிகள் மீது அடக்குமுறைகளை கையாண்டு வருவது மிகுந்த வேதனையளிக்கிறது.

**கழகப் பொருளாளர் வீரபாண்டி திரு.எஸ்.கே.செல்வம் அவர்கள் மீது போலியான புகாரில் பொய்யாக பதிவு செய்யப்பட்டிருக்கும் பொய்வழக்குப்பதிவை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். இல்லையெனில் ஆளுங்கட்சி பிரமுகர்களுக்கு ஆதரவாக செயல்பட்ட சேலம் மாவட்ட காவல்துறையினர் மீது நீதிமன்றத்தின் மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**



**டிடிவி தினகரன்**